ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4

Total No. of Questions : 26 ] [ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 112-T (NS)**

**Code No. : 112-T (NS)**

# ಕಲಿಕೆಯನು-ಅನುಕೂಲಿಸುವುದು (ಕಿ.ಪ್ರಾ.ಶಾ.)

# ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು

# FACILITATING LEARNING ( LPS )
# FIRST LANGUAGE — TAMIL

**(ಹೊಸ ಪಠ್ಯವಸ್ತು)**

**( New Syllabus )**

ದಿನಾಂಕ : 01. 07. 2015 ]

Date : 01. 07. 2015 ]

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1.00 ರವರೆಗೆ ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 60

Time : 10.00 A.M. to 1.00 P.M. ] [ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*

*Register Number of the Candidate*

***குறிப்பு :***
i) இது 60 மதிப்பெண்களின் வினாத்தாள்
ii) ஒவ்வொரு வினாவிற்கும் சிந்தித்து பதில் அளிக்க வேண்டும். இதற்காக 3 மணி நேரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.
iii) ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையளிக்கவும்.

## PART – I

I. இப்பகுதியில் மொத்தம் 10 வினாக்கள் இருக்கின்றன. **எல்லா** வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அதில் ஏதாவது ஒரு விடை சரியானதாக இருக்கும். அதைத் தேர்ந்தெடுத்து எழுதவும் :

$10 \times 1 = 10$

1. மொழியின் மீது ஆர்வம் ஏற்படுவது
   (A) மக்கள் கூடும்போது
   (B) வகுப்பறையில் ஆசிரியர் உரையாடும்போது
   (C) கற்கும் நேரத்தில்
   (D) பலருடன் பேசும்போது.

2. தன்னடக்கம் வகுப்பறைகளில் குழந்தைகளுக்கு உதவியாக இருப்பது
   (A) புரிந்து கொள்ளும் அளவிற்கு
   (B) பொறுமையுடன் கற்பது
   (C) தனித்தனியாக கற்பது
   (D) எல்லா குழந்தைகளுக்கும் ஏற்றது.

3. கேட்டல் முறை எவ்வாறு நடைபெறுகிறது ?
   (A) பெற்றோர்களிடம் ஆடும்போது
   (B) நண்பர்களிடம் விளையாடும்போது
   (C) ஆசிரியர் பாடம் நடத்தும்போது
   (D) மாணவர்கள் தூங்கும்போது.

4. வீட்டு மொழி என்றால் என்ன ?
   (A) குழந்தை தன் தந்தையருடன் பேசுவது
   (B) ஒரு மாநிலத்தில் அதிகப்படியான மக்கள் பேசும் பேச்சு
   (C) பள்ளியில் எல்லோரும் கற்கும் மொழி
   (D) குழந்தை வீட்டில் எல்லோரும் பேசும் மொழி.

5. ஆசிரியர் குழந்தைகளின் மொழிக்கு எதற்காக மதிப்பு கொடுக்க வேண்டும் ?
   (A) ஆசிரியரின் கடமை
   (B) மொழியின் மேல் உள்ள பற்று
   (C) அது குழந்தைகள் கற்றுக் கொள்ளும் மொழி
   (D) எளிதில் புரியக்கூடியது.

6. பேச்சில் குறையுடைய மாணவர்களைத் திருத்துவது .......................... .
   (A) நாபிறழ் பயிற்சியளிப்பது
   (B) ஒரே சொல்லை பலமுறை உச்சரிப்பது
   (C) மருத்துவரிடம் காண்பிப்பது
   (D) பேச்சுப் பயிற்சி கொடுப்பது.

7. கேட்டல் திறனை வளர்ப்பதற்கு ............................... .
   (A) ஆடுவது
   (B) திரைப்படம் பார்ப்பது
   (C) எல்லோருடனும் பேசுவது
   (D) கதைகள், உரையாடல் கேட்பது.

8. காது கேளாத குழந்தைகளுக்கு ...................................... .
   (A) ஆசிரியர் உரக்கப் படிப்பது
   (B) தனியாக அமர்த்துவது
   (C) கதை சொல்வது
   (D) படத்தை காண்பித்து விளக்குவது.

9. பெற்றோர்களிடம் ஆசிரியர்

   (A) சப்தமாக பேசவேண்டும்

   (B) தனியாக அழைத்து பேச வேண்டும்

   (C) கலந்துரையாட வேண்டும்

   (D) உரையாடல் மெதுவாக இருக்க வேண்டும்.

10. தேர்வு முறைகள் ............................ வகைப்படும்.

   (A) படிப்புத் தேர்வு

   (B) நன்னடத்தை தேர்வு

   (C) எழுத்து மற்றும் வாய்மொழி என இரண்டு

   (D) விளையாட்டுத் தேர்வு.

## PART – II

II. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 5 × 2 = 10

11. பேசுதல் எவ்வாறு உண்டாகும் ?

12. காது கேளாத குழந்தைகளுக்கு எவ்வாறு பாடம் கற்பிப்பீர் ?

13. படிப்பில் குறையுள்ள குழந்தைகளுக்கு எவ்வாறு பாடம் கற்பிப்பீர் ?

14. பார்வைக் கோளாறு உள்ள குழந்தைகளுக்கு எவ்விதம் கற்பிக்க வேண்டும் ?

15. விளையாட்டின் விதிமுறைகள் யாவை ?

16. வீட்டி ருந்து பள்ளிக்கு வரும் குழந்தைகளிடம் ஆசிரியர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ?

17. கற்போம் மகிழ்வோம் ஆகியவற்றில் உள்ள குழுக்களின் பெயர்களை எழுதுக.

18. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மேல் கொண்டுள்ள குறை யாது ?

## PART – III

III. எவையேனும் **எட்டு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 8 × 5 = 40

19. அ) குழந்தைகளின் மொழியில் கிராமிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துவதில் உள்ள நன்மைகள் யாவை ?

*அல்லது*

   ஆ) மொழி பயிற்றும் முறையில் வீட்டில் பேசப்படும் பேச்சிற்கும் பள்ளியில் பேசப்படும் பேச்சிற்கும் வேறுபாடு அதிகமில்லை. இதைப் பற்றி உங்களின் கருத்து என்ன ?

20. அ) மொழி பயிற்றும் முறையில் கட்புலக் கருவிகளின் பயன்களைப் பற்றி விளக்குக.

*அல்லது*

   ஆ) எழுத்து முறை திறனில் - எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதைப் பற்றி விவரி.

21. அ) வீட்டில் பேசப்படும் மொழியில் கற்பிப்பதில் எம்முறையைக் கையாள்வீர் ?

*அல்லது*

ஆ) பயிற்றும் மொழியில் நாளிதழ் மற்றும் கதை சொல்வது ஆகியவற்றில் உள்ள பயன்கள் யாவை ?

22. அ) படித்தல் என்றால் என்ன ? அதை எம்முறையில் பயிற்றுவிப்பீர் ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

*அல்லது*

ஆ) குழந்தைகளிடம் ஒரு வாக்கியத்தைக் கொடுத்து அக்குழந்தையை எவ்வாறு தேர்வு செய்வீர்கள் ? விவரி.

23. அ) தொடக்கப் பள்ளிகளில் ஆட்டம் மற்றும் வாய்மொழிப் பேச்சு ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் யாவை ? அதை எதிர்கொள்ளும் முறை யாது ?

*அல்லது*

ஆ) விளையாட்டு மற்றும் படிப்பு ஆகியவற்றிற்குள்ள ஒற்றுமைகள் யாவை ?

24. அ) குழந்தைகள் எழுதுவதற்குமுன் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய முறை யாது ?

*அல்லது*

ஆ) முதல் வகுப்பு குழந்தைகளுக்கு எழுத எவ்வாறு கற்பிப்பீர் ?

25. அ) படித்தல் மற்றும் எழுதுதலை எவ்வாறு தேர்வு செய்வீர் ?

*அல்லது*

ஆ) மக்களிடையே பேசப்படும் மொழிகளின் விளக்கம் என்றால் என்ன ?

26. அ) தொடக்க நிலையில் பளளிகளில் தினசரிப் பத்திரிக்கைகளை எவ்வாறு உபயோகப்படுத்துவீர் ?

*அல்லது*

ஆ) கீழ்க்கண்ட கதையைப் படித்து நாடக முறையில் உன் சொந்த நடையில் எழுதுக :

ஒரு விவசாயிக்கு இரு குழந்தைகள் இருந்தனர். அவர்கள் இருவரும் எப்போதும் சண்டை போட்டுக் கொண்டேயிருந்தனர். விவசாயி எவ்வளவு முயற்சி செய்தும் பயனளிக்கவில்லை. ஒருநாள் அவர் சந்தைக்குச் சென்று ஒரு கரும்புக் கட்டை வாங்கி வந்து அவர்களை அழைத்து முறிக்கச் சொன்னார். ஆனால் அவர்களால் முடியவில்லை. பின்பு ஒவ்வொன்றாக எடுத்து முறிக்கச் சொன்னார். அவர்களால் முறிக்க முடிந்தது - இதி ருந்து நாம் தெரிந்து கொள்ளும் நீதிக் கருத்து.